அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 11

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

சங்கப்பாடல்கள் என அழைக்கப்படும் பழந்தமிழ்ப் பாடல்கள் இன்று எமக்குக் கிடைத்துள்ளன. அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இரு தொகுப்புகளாகக் காணப்படுகின்றன. இவை இரண்டும் பதினெண் மேல்கணக்கு நூல்களாகும். இவை பல்வேறு ஆசிரியர்களால் பல்வேறு காலங்களில் எழுதப்பட்டவையாகும். எட்டுத்தொகைப் பாடல்கள் உதிரிகளாகக் காணப்படும் பாடல்களின் தொகுப்பாகும். பத்து நெடும் பாடல்களின் தொகுப்பே பத்துப்பாடல் எனப்படுகிறது. பத்துப்பாடல்களும் அகவலோசையால் ஆனவை. இப்பாடல்கள் தொழில், அளவு, பாட்டு, பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்டவை. இவற்றில் பழந்தமிழ்நாட்டின் வாழ்க்கை முறை, பண்பாடு பற்றிய அரிய செய்திகள் பொதிந்திருக்கின்றன.

பண்டைத் தமிழர் வாழ்வை உள்ளது உள்ளபடி காட்டும் காலக்கண்ணாடியாகவே இவை விளங்குகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பவை அகப்பொருள் பற்றியவையாகும். புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் பற்றியவையாகும். பரிபாடல் அகமும் புறமும் பற்றியதாக அமைந்துள்ளது. பரிபாடலுக்கு உரை எழுதியவர் பரிமேலழகர் ஆவார். புறத்திணைப் பாடல்களில் வாழ்க்கைக்கு இன்றியமையாத அறங்களையும் ஒழுக்கங்களையும் வலியுறுத்திப் பாடப்பட்டுள்ளன. இவ்வரிய இலக்கியங்களைக் கற்றும் பாதுகாத்தும் பயன்பெறுவோம்.